


# மூத்தவர் யார்?

ஒரு காட்டிலே ஒரு வட்டுக் குருவியும், ஒரு குரங்கும், ஒரு யானையும் வாழ்ந்து வந்தன. அவை நல்ல நண்பர்களாக இருந்தன. ஆனால் அவை ஒன்றை ஒன்று மதிக்கவில்லை. ஆனால் தம்முள் வயதில் மூத்தது எது வென அறிந்து அதன் அறிவுரைகளைக் கேட்டு நடக்க விரும்பின. அந்தக் காட்டில் ஒரு பெரிய ஆலமரமும் இருந்தது. அந்த ஆலமரத்தை நீண்ட காலமாக யார் அறிவார்களோ அவர் தான் தம்முள் மூத்தவர் என முடிவு செய்தன.



‘‘இந்த ஆலமரத்தைப் பற்றி உங்களுக்கு எவ்வளவு காலமாகத் தெரியும்’’ வட்டுக்குருவியும், குரங்கும் யானையிடம் கேட்டன.

எனது சிறு பராயத்தில் நான் இதைக் கடந்து சென்று இருக்கிறேன். சிறியதாக இருந்த  இந்த ஆலமரம் எனது வயிற்றில் பட்டும் படாமலும் இருந்தது’’ யானை சொன்னது.



அதே கேள்வியை யானையும், வட்டுக்குருவியும் குரங்கிடம் கேட்டன.

''நண்பர்களே! நான் சிறுவயதில் தரையில் இருந்தே இதன் தளிரைத் தின்றேன்'' என்றது குரங்கு.

அடுத்து, யானையும், குரங்கும் அதே கேள்வியை வட்டுக்குருவியிடம் கேட்டன. 'நண்பர்களே, அந்தக் காலத்தில் நான் பெரிய ஆலமரமொன்றின் காயைத் தின்று விட்டு எச்சத்தை இங்கே கழித்தேன். அந்த விதையில் இருந்தே இந்த ஆலமரம் முளைத்தது' என்றது வட்டுக்குருவி.



இதைக் கேட்ட யானையும், குரங்கும் வட்டுக்குருவி தான் வயதில் மூத்தது என்பதை உணர்ந்தன. அதனால் வயதில் மூத்த வட்டுக் குருவியை மதித்து அதன் ஆலோசனைகளைக் கேட்டு நடந்து கொண்டன; அவை மூன்றும் ஒற்றுமையாக வாழ்ந்து சீல அனுஷ்டானங்கள் மேற்கொண்டன. அதன் பலனாக, அவை மறுபிறவியில் தேவலோகத்தில் பிறந்தன.

## அரும்பதங்கள்
## වදන් පෙළ

| | | |
|---|---|---|
| மதி | - | ගරු කරන්න |
| அறிவுரை | - | උපදෙස් |
| நீண்டகாலம் | - | දීර්ඝ කාලයක් |
| முடிவு செய் | - | තීරණය කරන්න |
| மூத்தவர் | - | වැඩිමහල් කෙනා |
| சிறுபராயம் | - | පුංචි කාලය/ළමා කාලය |
| கடந்து செல் | - | තරණය කරන්න/පසු කරන්න |
| பட்டும் படாமலும் | - | ගැටී නොගැටී |
| தளிர் | - | දළු |
| விதை | - | බීජය |
| முளைத்தது/முளை | - | පැළවුණා |
| ஆலோசனை | - | උපදෙස් |
| மறுபிறவி | - | පුනර්භවය |



### செயற்பாடு - 1
### ක්‍රියාකාරකම - 1

**பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.**
පහත සඳහන් ප්‍රශ්නවලට පිළිතුරු ලියමු.

1. காட்டில் வாழ்ந்த மிருகங்கள் எவை?

________________________________________

2. இந்த மிருகங்களில் பெரிய மிருகம் எது?

___________________________________________

3. இந்த மிருகங்கள் எந்த மரத்தைப் பற்றி விவாதிக்கின்றன?

___________________________________________

4. வட்டுக் குருவியை மூத்ததாக ஏன் அவை தெரிவு செய்தன?

___________________________________________

5. இந்தக் கதை எமது வாழ்க்கைக்கு எதைக் கற்றுத் தருகிறது?

___________________________________________



## செயற்பாடு - 2
## ක්‍රියාකාරකම - 2

**உதாரணத்தைப் பின்பற்றி கீறிட்ட இடங்களை நிரப்புவோம்.**
උදාහරණය සැලකිල්ලට ගෙන හිස්තැන් පුරවමු.

උදා:- <u>பெரிய</u> ஆலமரம் இருந்தது.

1. அவை _______________ நண்பர்கள்.
2. வட்டுக்குருவி ஒரு _______________ பறவை.
3. அங்கே _______________ மரங்கள் இருந்தன.
4. _______________ விதையில் இருந்து ஆலமரம் முளைத்தது.
5. வெசக் தினத்தன்று பௌத்தர்கள் _______________ வெசக் கூடுகள் செய்வார்கள்.



## செயற்பாடு - 3
## ක්‍රියාකාරකම - 3

**அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ள சொற்களைக் கொண்டு இடைவெளிகளை நிரப்புங்கள்.**

වරහන් තුළ දී ඇති වචන යොදා හිස්තැන් පුරවන්න.

**(கேட்கலாம் / கதைக்கலாம் / பிறக்கலாம் / வாழலாம் / வளரலாம்)**

1. சீல அனுஷ்டானங்கள் மேற்கொண்டால் மறுபிறவியில் தேவலோகத்தில் ____________________

2. ஒவ்வொருவரையும் மதிக்கப் பழகினால் ஒற்றுமையாக ____________________

3. நன்றாகத் தமிழ் படித்தால் தமிழ் மக்களுடன் தமிழில் ____________________

4. பன்சலைக்குச் சென்றால் தர்ம போதனை ____________________

5. மூத்தவர்களது அறிவுரைகளைக் கேட்டால் நல்ல பிள்ளைகளாக ____________________